**கவனிக்க.**- *04.05.2023 ஆந் திகதிய 2331 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2332 - 2023 මැයි මස 12 වැනි සිකුරාදා - 2023.05.12
*2332 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 530 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 532 |


**கவனிக்க.**- பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகம் சட்டமூலம் 2023, ஏப்பிறல் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

531- B82454 - 5403 (2023/03)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாத்தளை பிரதேச சபை

*1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ்*
*எதிர்ப்பைக் கோருதல்*

*மாத்தளை பிரதேச சபை 2023 சனவரி 05 ஆந் திகதி நடத்திய அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் 5.5 இலக்கம் கொண்ட கீழே தரப்பட்டுள்ள முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.*

எச். எம். ரீ. பீ. ஹீன்கெந்த,
செயலாளர்,
மாத்தளை பிரதேச சபை,
பலாபத்வல.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2023, ஏப்பிறல் 17.

### தீர்மானம்

*1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இங்கு அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரால் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 2023 ஆம் ஆண்டின் விலங்கு அறுவை நிலையத்தை நடத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதை எதிர்க்கும் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் இரட்டைப் பிரதிகளில் மாத்தளை பிரதேச சபைக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 07(2) ஆவது பிரிவின் கீழ் மாத்தளை பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை

| விண்ணப்பிப்பவர் பெயர் | விலங்கு அறுவை நிலையம் | விலங்கின் வகை |
|---|---|---|
| எஸ். எச். மொஹமட்,<br>இல. 94,<br>ஜோர்ஜ் சில்வா மாவத்தை,<br>கண்டி. | இல. 109 ஏ, ஹத்தமுனகால,<br>கெட்டவல | மாடு |

05 - 139

---

## ஹபராதுவ பிரதேச சபை

கொசுக்கள் மற்றும் நோயை உண்டாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கான நிலையான துணைச்சட்டங்கள்

*மேலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி தாபனங்களின் (அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் கீழ் மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரால் தொகுக்கப்பட்ட 2013.10.25 ஆந் திகதி இலக்கம் 1834 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி மேலே குறிப்பிட்டுள்ள வரைவுகள் பத்திரிகையில் iv (அ) பகுதியில் மேலே குறிப்பிட்டுள்ள வரைவுகள் துணைச் சட்டங்கள் வெளியிடப்பட்டன.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதன் கட்டளைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் ix ஆம் உப பிரிவின் (வ) பந்தியால் கொசுக்கள் மற்றும் நோயை உண்டாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கான நிலையான துணை விதி சட்டமாக்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதி நடைமுறைப்படுத்துவதற்காக ஹபராதுவ பிரதேச சபையின் 2023.03.14 ஆந் திகதி மாதாந்த மகா சபைக் கூட்டத்தில் நிர்வாகத் தீர்மான இலக்கம் 2023/56 உடைய சபையின் ஒருமித்த கருத்து மூலம் முடிவு செய்யப்பட்டது. இந்த அறிவிப்பு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கும் திகதியிலிருந்து ஹபராதுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செயல்படுத்தப்படும் என்று அதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*தில்சான் விதானகமகே,*
*தலைவர்,*
*ஹபராதுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஹபராதுவ,*
*2023, மாச்சு 17.*

*05 - 141/1*

---

**ஹபராதுவ பிரதேச சபை**

*திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்*

*மேலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி தாபனங்களின் (அங்கீகாரம் பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் கீழ் மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரால் தொகுக்கப்பட்ட 2013.10.25 ஆந் திகதி இலக்கம் 1834 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி மேலே குறிப்பிட்டுள்ள வரைவுகள் பத்திரிகையில் iv (அ) பகுதியில் மேலே குறிப்பிட்டுள்ள வரைவுகள் துணைச் சட்டங்கள் வெளியிடப்பட்டன.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதன் கட்டளைச் சட்டத்தின் 93 ஆம் பந்தியில் மற்றும் 126 ஆவது பிரிவின் ix ஆம் உப பிரிவின் (ஆ) மற்றும் (இ) பந்தியால் திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய துணை விதி சட்டமாக்குவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதி நடைமுறைப்படுத்துவதற்காக ஹபராதுவ பிரதேச சபையின் 2023.03.14 ஆந் திகதி மாதாந்த மகா சபைக் கூட்டத்தில் நிர்வாகத் தீர்மான இலக்கம் 2023/55 உடைய சபையின் ஒருமித்த கருத்து மூலம் முடிவு செய்யப்பட்டது. இந்த அறிவிப்பு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கும் திகதியிலிருந்து ஹபராதுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செயல்படுத்தப்படும் என்று அதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*தில்சான் விதானகமகே,*
*தலைவர்,*
*ஹபராதுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஹபராதுவ,*
*2023, மாச்சு 17.*

*05 - 141/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.